ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2082/60 - 2018 අගෝස්තු මස 03 වැනි සිකුරාදා - 2018.08.03
*2082/60 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### 265 ஆம் அத்தியாயமான உள்ளூராட்சி (நிர்வாகப் பிரதேசம்) கட்டளைச் சட்டம்

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபை (இடைநிகழ்வு ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1)(அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய (265 ஆம் அத்தியாயமான) உள்ளூராட்சி (நிர்வாகப் பிரதேசம்) கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (அ) பந்தியினால் வடமேல் மாகாண முதலமைச்சரும் உள்ளூராட்சி விடயப் பொறுப்புடைய அமைச்சருமான தசநாயக்க குணரத்ன பஸ்நாயக்க முதியன்சேலாகே தர்மசிறி தசநாயக்க ஆகிய எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, இங்கு கீழ்க்காணப்படும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள நிர்வாக மாவட்டம், 2018.07.06 ஆந் திகதி தொடக்கம் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவாறு மேற்குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைச் சட்டத்தின் பணிகளுக்காக நிர்வாகப் பிரதேசமாக இருக்க வேண்டும் என்று இத்தால் உத்தரவு பிறப்பிக்கின்றேன்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1993.03.26 ஆந் திகதிய 760 ஆம் இலக்க வர்த்தமானியின் IV (அ) பகுதியில் வடமேல் மாகாண முதலமைச்சரும் கல்வி, உள்ளூராட்சியும் கைத்தொழில் பற்றிய மாகாண அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா அவர்களினால் வெளியிடப்பட்ட 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கத்திற்கான மாகாண சபை (இடைநிகழ்வு ஏற்பாடுகள்) சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1955 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கச் சட்டத்தின் திருத்தியமைக்கப்பட்ட 1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்கத்திற்கான உள்ளூராட்சி (நிர்வாக பிரதேசம்) கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான அறிவித்தலினை இத்தால் இரத்துச் செய்கின்றேன்.*

டீ. ஜீ. பி. எம். தர்மசிறி தசநாயக்க,
வடமேல் மாகாண சபையின் முதலமைச்சரும்
நிதி, திட்டமிடல், பொறியியல் சேவை, நீதியும் சமாதானமும் கல்வி,
உள்ளூராட்சி மற்றும் மாகாண நிருவாக,
வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலா நடவடிக்கை அமைச்சர்.

குருநாகல்,
*2018, யூலை 06.*

**அட்டவணை**

1. குருநாகல் நிர்வாக மாவட்டம்
2. புத்தளம் நிர்வாக மாவட்டம்

*08-677/1*

1A - PG 4155— 08 (2018/08)
*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**(265 ஆம் அத்தியாயமான) உள்ளூராட்சி (நிர்வாகப் பிரதேசம்) கட்டளைச் சட்டம்**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபை (இடைநிகழ்வு ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, (265 ஆம் அத்தியாயமான) உள்ளூராட்சி (நிர்வாகப் பிரதேசம்) கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (அ) பந்தியினால் வடமேல் மாகாண முதலமைச்சரும் உள்ளூராட்சி விடயப் பொறுப்புடைய அமைச்சருமாகிய தசநாயக்க குணரத்ன பஸ்நாயக்க முதியன்சேலாகே தர்மசிரி தசநாயக்க ஆகிய எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி, இங்கு கீழ்க்காணப்படும் அட்டவணையின் I ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு நிர்வாகப் பிரதேசங்களினதும் உதவி ஆணையாளரின் அலுவலகம் இங்கு II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள முகவரியில் கொண்டு நடாத்தப்படுகின்றது பற்றி இத்தால் அறிவித்தல் விடுக்கின்றேன்.*

டீ. ஜீ. பி. எம். தர்மசிறி தசநாயக்க,
வடமேல் மாகாண சபையின் முதலமைச்சரும்
நிதி, திட்டமிடல், பொறியியல் சேவை, நீதியும் சமாதானமும் கல்வி,
உள்ளூராட்சி மற்றும் மாகாண நிருவாக,
வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலா நடவடிக்கை அமைச்சர்.

குருநாகல்,
2018, யூன் 20.

**அட்டவணை**

| I ஆம் நிரல் | | II ஆம் நிரல் |
|---|---|---|
| 1. | குருநாகல் நிர்வாக அதிகாரப் பிரதேசம் | 2 ஆம் மாடி, பி நுழைவாயில், மாகாண சபை அலுவலகத் தொகுதி, குருநாகல் |
| 2. | புத்தளம் நிர்வாக அதிகாரப் பிரதேசம் | பழைய அனுராதபுரம் வீதி, புத்தளம் |

08-677/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.